**தலைப்பு 281–கமநல அபிவிருத்தி திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கமநல அபிவிருத்தித்திணைக்களத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றுமற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம்,எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுஅதிகாரச்சட்டத்தின் 11(1)பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020செப்தெம்பர் 21ஆந் திகதியன்றுகணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி தினைக்களத்துடன் தொடர்புடைய வருடாந்தவிரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020நவம்பர்25 ஆந்திகதியன்றுகணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன்சேர்த்து வாசிக்கப்படும். வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்காளல் ஏற்படும் தாக்கத்தைத் தவிர,2019டிசெம்பர் 03ஆந் திகதிய 271/2019ஆம் இலக்க அரச கணக்குகளில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டஅந் நிதிக் கூற்றுக்களில் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக்கோட்பாடுகளுக்கமைய நியாயமானது உண்மையானதுமான நிலைமையைத்தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக்கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்துப்பேணுவதாகபிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள்அற்றன என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல.மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக் கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளதார தீர்மானங்களைமேற்கொள்ளும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

தொழிலாளர் தீர்ப்பு மற்றும் தொழில்சார் பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்ாக அபிப்பிராயம் வெளியிடக் கருதாத போதும்,சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக உணரப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை கணக்கீட்டு மதிப்பீடுகளது நியாயபூர்வத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தின் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(இ)பந்தி மற்றும் 38 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான்வெளியிடுகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2, 1.6.3.(அ) (ஆ), 1.6.4 (ஆ) மற்றும் 1.6.7(இ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட முன்னைய ஆண்டினது நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அவதானிப்புரைகள் சம்பந்தமான பரிந்துரை அமுலாக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த நிதிக்கூற்றுக்கள் | | |
| 2019 டிசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டினது நிதிக் கூற்றுக்களது சிங்களப் பிரதியும் ஆங்கிலப் பிரதியும் திணைக்களத்தில் 2020 யூலை 01 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2020 செப்டெம்பர் 17 வரை அதன் தமிழ்ப்பிரதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த தினத்தில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மொழிபெயர்ப்பு நிறைவடைந்துள்ளது. தேவையான பிரதியைக் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க இயலும். |

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான கணக்கிணக்கக் கூற்று

| | | |
|---|---|---|
| 2019டிசெம்பர் 03 இல் ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டினது முற்பண பீ கணக்கு 2019 பெப்ரவரி 28 ஆந் திகதியளவில்சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும்,2020யூலை07 அன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த தினத்தில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான முற்பண பீ கணக்கினது 2019 சரியான இறுதி காலாண்டு அறிக்கைகள் மாவட்ட அலுவலகங்களிடமிருந்து 2020 மார்ச் ஆரம்பம் வரை பெறப்பட்டிருந்தன. அதன் காரணமாக, மாவட்டங்களை உள்ளடக்கிய பூரணமாகிய கணக்கை முடிவு செய்வது 2020 மார்ச் முதல் வாரம் வரை நீடித்தது. அதன் பின்னர், நாட்டில் நிலவிய COVID 19 நிலைமை காரணமாக அமைச்சின் செயலாளரது கணக்குகளை சான்றுபடுத்தல் 2020 யூன் மாதத்தில் நடைபெற்றது. இத் தாமதங்களைத் தவிர்த்து எதிர்காலத்தில் குறித்த தினத்தில் கணக்குகள் சமர்ப்பிக்கப்படும். |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வைப்புக் கணக்கு ஒன்றின் திணைக்கள மாற்று திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட வித்தியாசம் ரூபா 652,148 ஆகும். | திணைக்கள மற்றும் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் பொது வைப்பு மீதி கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். | 2007 நவம்பர் 15 வரை கமநல அபிவிருத்தி நிதியத்துக்கென மக்கள் வங்கிக் கணக்கில் 6-1001-1673169411எனும் கணக்கொன்று வேறாகப் பேணப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் பிரதான கணக்கும் கமநல அபிவிருத்தி நிதியக் கணக்கும் ஒருங்கிணைக்கப்பட்டன. ஒருங்கிணைக்கப்படுவதற்கு முன்னர் ரூபா 651,797 வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. இதனைப் பரீசீலித்த குழுவினரின் அறிக்கை 2019 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்த பின்னரே கிடைத்தது. அது |

| | | |
|---|---|---|
| | | ஆய்வு செய்யப்பட்டு தேவையான சீராக்கல் 2020 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். |

### 1.6.3 நிதி நிலைமை மீதான கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் கீழ் உள்ள 522 கமநல சேவை நிலையங்கள்,25 மாவட்ட அலுவலகங்கள், 05 இயந்திர சாதன நிலையங்கள், தலைமை அலுவலகம் என்பவற்றினது காணிகள் நிதிச் சார்பற்ற சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்திற்குரிய சகல காணிகளும் கணக்கிலிடப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 02 நிலையங்களது மதிப்பீட்டுப் பெறுமதி 2020 ஆம் ஆண்டில் கணக்கிலிடப்பட்டது. ஏனைய காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படும் |
| (ஆ) திணைக்களத்திற்குரிய 409 கமநல சேவை நிலையங்கள் 03 இயந்திர சாதன கட்டிடங்கள், தலைமை அலுவலகத்தின் 03 கட்டிடங்கள் என்பவற்றின் பெறுமதி நிதிச் சார்பற்ற சொத்தின் கீழ் காட்டப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் சகல கட்டிடங்களும் கணக்கிலிடப்பட வேண்டும். | தலைமை அலுவலகத்தினதும் 9 நிலையங்களினதும் கட்டிடத் திட்டங்களது பிரதிகளும் விலை மதிப்புத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை மதிப்பீட்டுப் பெறுமதி பெறப்படவில்லை. 2020 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட 02 நிலையங்களது கட்டிடப் பெறுமதி 2020 ஆம் ஆண்டில் கணக்கிலிடப்பட்டது. ஏனைய கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு எதிர்காலத்தில் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படும். |

**1.6.4 ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 502(2) II ஆம் நிதிப் பிரமாண அனுபந்தத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை / 502(2) II ஆம் நிதிப் பிரமாண அனுபந்தம் என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துப் பதிவேடு CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பேணப்படுகின்றது. கொள்வனவு செய்யப்படும் மற்றும் கைதவிர்ப்புச் செய்யப்படும் சொத்துக்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படுகின்றன. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 891(1) க்கமைய பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களதும் ஊழியர்களதும் தகவல்கள் அடங்கிய பிணைப் பதிவேடு பேணப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) க்கமைய தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களுக்கான பிணைப் பதிவேடு பேணப்பட வேண்டும். | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களால் அரச சேவை பரஸ்பர பிணை வைப்புச் சங்கத்தின் ஆலோசணைப் பிரகாரம் பிணைப் பதிவேடு பேணப்படுகின்றது. இது தொடர்பாக தலைமை அலுவலகம் பிணைப் பதிவேட்டைப் பேணுகின்றது. |

**1.6.5 கணக்காய்வுச் சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 1,656,787 பெறுமதியான 09 உறுதிச் சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | சகல கொடுப்பனவு உறுதிச் சான்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட உறுதிச் சான்றுகள் தேடப்பட்டவாறுள்ளன. |

### 1.6.6 கணக்கீட்டு உத்தியோகத்தர் மேற்கொள்ள வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்

2018 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாகச் சான்றுபடுத்த வேண்டும். ஆயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணுவதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதி வழங்க வேண்டுவதுடன், அதற்கமைய ஆக்கபூர்வமாக உள்ளதா என்பதை அவ்வப் போது மீளாய்வு செய்து அம்முறைமை தேவையான மாற்றங்களைச் செய்யவும் வேண்டும். அம் மீளாய்வு எழுத்து மூலம் அமைவதுடன், அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவும் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான மீளாய்வுக்கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் நேர காலத்துடன் தயயாரிக்கப்படுவதைகணக்கீட்டு உத்தியோகத்தரும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டுமாயினும், அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புரையின் காரணமாக அத்தேவை பூர்த்தி செய்யப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த தினத்தில் கணக்குகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தேவைக்கேற்ப சகல | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் | 2020 செப்டம்பர் 15 இல் உள்ளவாறு 25 கணக்காய்வு ஐய வினாக்குக்குப் பதில் வழங்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குவது சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டுமாயினும், அறிக்கையின் 3.7 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்கப்படவில்லை. | சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஈ) | உள்ளகக் கணக்காய்வு முறையானவாறு செயற்படுவதற்கு ஆக்கபூர்வமான விதி முறைகள் உள்ளதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்த வேண்டுமாயினும், அறிக்கையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் அத் தேவை பூர்த்தி செய்யப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்படி கணக்காய்வு ஐய வினாக்களில் சுட்டிக்காட்டப்பட்ட பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 2.192 மணித்தியாலங்கள் ஆகும். எவ்வாறாயினும்,2019 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் திட்டத்தில் நேரமானது 1.128 மணித்தியாலங்கள் என 2019 ஒக்டோபர் 19 ஆந் திகதி மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. |

### 1.6.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன்இணங்காமை

தெரிவுச்செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு** | | | | |
| (அ) | கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 51(1) ஆம் பிரிவு | கமநல அபிவிருத்தி மன்றம் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்படவில்லை. | கமநலஅபிவிருத்தி அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கமநல அபிவிருத்தி மன்றம் தாபிக்கப்படும் வரை தொழிற்படு மன்றத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே,மேற்படி பிரிவு சம்பந்தமான கட்டளைகளைத் தயாரிப்பது பூர்த்தியாகி வர்த்தமானிப் பிரசுரத்திற்குத் தயாராக உள்ளது. அதன் பின்னர், அபிவிருத்தி மன்றத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தாபிப்பதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். 2020 ஆம் ஆண்டின் போது இதனை பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டம் | எல்லங்கா செயற்திட்ட தற்காலிக உத்தியோத்தரது சம்பளத்தில் கழித்த ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றிக்கான தவணைப் பணமாகிய ரூபா 367,002 இலங்கை மத்திய வங்கிக்கும் தொழில் திணைக்களத்திற்கும் அனுப்பி வைக்கப்படாது திணைக்களத்தின் பொது வைப்புக் கணனக்கிலிடப்பட்டிருந்தது. | குறித்த பிரமாணங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தயவுடன் அறிவிக்கின்றோம். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 571 ஆம் நிதிப் பிரமாணம் | வைப்புக் கணக்குகளது மீதி 2 ஆண்டுகளுக்கு மேற்படின் அதனைத் தீர்த்து வைக்க வேண்டுமாயினும், 04 பொது வைப்புக் கணக்குகளில் 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 40,023,045 தொகையானது 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளைக் கடந்த வைப்புகள் சம்பந்தமாகத் துரிதமாகச் செயற்படுமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2020 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | 2018 சனவரி 27 ஆந் திகதிய 05/2018 (1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | கமநல சேவைகள் திணைக்களத்திற்கான பிரசைகள் / சேவை நாடுநர் சட்டவாக்கம் தயாரிக்கப்படவில்லை. | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரசைகள் / சேவை நாடுநர் சட்டவாக்கத்தைத் தயாரப்பதற்குக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. திணைக்களம் புதிய கட்டிடத்தை அமைப்பதால் இவ் வேலை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. துரிதமாக இதனைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தயவுடன் அறிவிக்கின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 1981 ஒக்டோபர் 16 ஆந் திகதிய 107 சுற்றறிக்கையின் 30(iii) ஆம் பிரிவு | 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கான கமநல சேவைகள் நிலையங்களது 07 நிதிக் கூற்றுக்களும் 2019 ஆம் ஆண்டுக்காள 73 கமநல சேவைகள் நிலையங்களது நிதிக் கூற்றுக்களும் குறித்த தினத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தன. | திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சகல கணக்கு அறிக்கைகளது நிலுவைகளையும் 2020 செப்டெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்பு அனுப்புமாறு எனது 7/5/12/கி.வா/பொது எனும் இலக்கமுடைய 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | தேசிய பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.8.4(க) பிரிவு | கேள்வி கோரலின் போது உற்பத்தியாளர் அதிகார (Manufacture authorization) பதிவேட்டைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தும், அவ்வாறு அவற்றைச் சமர்ப்பிக்காத நிறுவனங்களுக்கு ரூபா 2,760,000 பெறுமதியான 150 மழை மானிகளுக்கான பொருட் கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன. | தேசிய பொருட் கொள்வனவுக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் கொள்வனவின் போது இவ்விடயம் தவறுதலாகச் கவனிக்கப்படாது போயுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 அரசாங்க உத்தியோகத்தர்களது முற்பணக் கணக்குத் தீர்வு மீதான கணக்கிணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 118 பிரகாரம் வேலை இடமாற்றத்துக்குள்ளாகும் உத்தியோகத்தர்களது கடன் மீதி 03 மாதங்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டுமெனினும், 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2004 ஒக்டோபர் 11 அந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்டம் 118 க்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வேலை இடம் மாறி வந்த சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து முறையே ரூபா 133,330 மற்றும் ரூபா 5,735,356 அறவிடப்படாதிருந்தன. | | |
| (ஆ) | 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்ட, வேலை நீங்கிய மரணமடைந்த, ஓய்வு பெற்ற,விடுவிக்கப்பட்ட ஏனைய கடன் மீதி ரூபா 15,316,695 ஆக இருந்தது. | பிணையாளி, ஓய்வூதியம், ஒழுக்காற்று நடவடிக்கை என்பவற்றின் மூலம் பொறுப்பைப் புறக்கணித்தவர்களிடமிருந்தோ அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் மூலமோ அறவீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

## 2.2 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018, 2019 ஆம் ஆண்டுகளில் உரத்திற்கான முற்பணத்தை தீர்வு செய்வதற்கு கமநல சேவை நிலையங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,064,993 கமத்தொழில் திணைக்களத்திற்கு வழங்கப்படாது தலைமை அலுவலகப் பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | கமத்தொழில் அமைச்சிற்குப் பணத்தைச் செலுத்தி கணக்கைத் தீர்வு செய்ய வேண்டும். | 2018, 2019 ஆம் ஆண்டுகளில் உரத்திற்கான முற்பணத்தைத் தீர்வு செய்வதற்கும் பெறப்பட்ட பணத்தைத் தீர்வு செய்யுமாறு குறித்த பிரிவுகளுக்கும் கடித மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2020 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் முற்றாக தீர்வு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்து தொடர்புடைய கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் மீதியாகிய ரூபா 655,287 நிலையங்களுக்கு வழங்கப்படாது தலைமை அலுவலக பொது வைப்புக் கணக்குகளிலிடப்பட்டிருந்தன. | கமநல சேவை நிலையங்களுக்குரிய தொகையைத் தாமதமின்றிச் செலுத்த வேண்டும். | தலைமை அலுவலக பொது வைப்புக் கணக்கிலிடப்பட்ட ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களது தொடர்புடைய கமநல சேவை நிலையங்களுக்கு அனுப்பப்பட வேண்டியரூபா 750,044 கடன் மீதியில் 2020 செப்டெம்பர் 10 ஆந் திகதியளவில் கிதலவ கமநல சேவை தொழிற்படு மன்றத்திற்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 94,757 தொகையானது 2020 யூலை 29 ஆந் திகதிய 751561 ஆம் இலக்கக் காசோலை மூலம் தீர்வு செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பொறியியலாளரதும் தொழில்நுட்ப உத்தியோகத்தரதும் பரிந்துரை இல்லாது 08 மாவட்ட அலுவலகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒப்பந்தப் பணமாகிய ரூபா 4,553,091 பொது வைப்புக் கணக்குகளில் 02 முதல் 05 ஆண்டுகளாகத் தேங்கி இருந்தன. குறித்த ஒப்பந்தங்களில் நிலவிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து அல்லது திருத்தம் மேற்கொள்ளப்படாது இருப்பின், நிறுத்தி வைத்த அத் தொகையைப் பயன்படுத்தி அக் குறைபாடுகளைப் பூர்த்தி செய்து நிறுத்தி வைத்த பணத்தைத் தீர்வு செய்வதறகு 2019 டிசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | தாமதமின்றிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் மாதமளவில் ரூபா 4,097,307 மீதி தீர்வு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ரூபா 455,784 மீதியானது எதிர்காலத்தில் தீர்வு செய்யப்படும். |
| (ஈ) | கமத்தொழில் இயந்திர சாதனங்களை வாடகைக்கு வழங்கி அதன் மூலம் பெறும் பணத்தை தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுமாயினும், குருநாகலை மற்றும் மொனராகலை மாவட்ட அலுவலகங்கள் 2016 தொடக்கம் 2018 வரை இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதால் பெற்ற ரூபா 1,256,497 வருமானம்மீளாய்வாண்டு இறுதியிலும் பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தன. | இயந்திர சாதன வாடகை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் மாதமளவில் குருநாகலை மாவட்ட அலுவலக பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்த மீதியில் ரூபா 588,485 தற்சமயம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 251,650 மீதியைத் துரிதமாகத் தலைமை அலவலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். என மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது. 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் மொனராகலை மாவட்ட அலுவலகம் தீர்வு செய்த தொகை ரூபா 209,592 ஆகும். எஞ்சிய ரூபா 206,770 மீதியைத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கான ரிக்யூசிசன் பத்திரம் தற்சமயம் கணக்குக் கிளையில் பெறப்பட்டுள்ளதாகவும் குறித்த மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | குருநாகலை மாவட்ட அலுவலகத்தில் ஏலத்தில் கைதவிர்ப்புச் செய்யப்பட்டதால் பெற்ற ரூபா 1,558,750 தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படாது 02 ஆண்டுகளுக்கு அதிகமாக பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | கைதவிர்ப்பு வருமானம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் ரூபா 654,150 மீதியானது தீர்வு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 904,600 மீதியில் ரூபா 787,150 தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ரூபா 117,450 மீதியை கீனவல கமநல சேவை தொழிற்படு மன்றத்திற்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் குருநாகலை மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது. |
| (ஊ) | குருநாகலை மாவட்ட அலுவலகத்தில் 2019 ஆம் ஆண்டில் டிறக்டர் மற்றும் கமத்தொழில் உபகரணக் கைதவிர்ப்பு மூலம் பெறப்பட்ட ரூபா 5,533,250 வருமானம் கமநல அபிவிருததி நிதியத்தில் செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்லிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக, நிதியத்தின் வருமானம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கமநல அபிவிருத்தி வருமானம் அந்நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட டிறக்டர் மற்றும் கமத்தொழில் உபகரணச் சொத்து கைதவிர்ப்பு வருமானம் மீண்டும் பரீசீலிக்கப்பட்டு அதனைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | 2017 ஏப்ரல் 24 ஆந் திகதியன்று ஊறுமுத்த ரலபனாவ கால்வாய், பொத்துப்பிட்டிய அமுன மற்றும் மஹபன்வில தவடகஹதெனிய அமுன கால்வாய் பாதைகளை நிர்மாணிக்கும் செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு கமநல நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 995,849 குறித்த விடயங்களுக்குப் பயன்படுத்தப்படாது மாத்தறை மாவட்ட அலுவலக மூன்றாம் தரப்பினர்களுக்கான கொடுப்பனவிற்குரிய வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விவசாயிகளது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் அமுலாகிய இரு செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை. அப் பிரிவிற்குரிய விவசாய அமைப்பால் அச் செயற்திட்டம் (அமுன) ஆரம்பிக்கப்பட்ட இடத்தில் நிர்மாண வேலைக்கு எதிர்ப்பு உருவாகியதால் அதனை ஏறக்குறைய 100 மீட்டருக்கு அப்பால் நிர்மாணிக்குமாது முன்மொழியப்பட்டுள்ளது.<br>அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்துக்காகத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டதாக மாத்தறை மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2019 ஆகஸ்ட் 28 ஆந் திகதியன்று வெவ்கம புபுது செயற்திட்டத்தின் கீழ் குளங்களின் கீழ்ப் பகுதியை நிர்மாணிப்பதற்கு தேசிய கொள்கை, பொருளாதார நடவடிக்கை மீள் குடியேற்ற மற்றும் புனர் நிர்மாணம் வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வவுனியா மாவட்ட அலுவலகத்திற்கு ரூபா 8,000,000 வழங்கப்பட்டது. 2020 மார்ச் வரை குறித்த விடயத்திற்குப் பயன்படுத்தப்படாது அது பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | வெல்கம புபுது செயற்திட்டத்தின் கீழ் முன் மொழியப்பட்ட பணிகள் நடைபெற வேண்டும். | இதில் குறிப்பிடப்பட்ட வெல்கம புபுது செயற்திட்டம் 2018 தொடக்கம் வவுனியா மாவட்டத்தில் நடைபெறுகின்றது. இதுவரை அச் செயற்திட்டத்திற்குரிய சில நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூபா 5.2 மில்லியனுக்கு அதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய வேலை அடுத்த ஆண்டு வரை நடைபெற உள்ளதால் பொது வைப்புக் கணக்கில் அத் தொகை இடம்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அலுவலகம் அறிவித்தள்ளது. |
| (ஐ) | விவசாய வங்கிகளால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் செலுத்தப்படாது நீதிமன்ற வழக்குத் தொடரப்பட்டு ரூபா 1,508,527 அறவிடப்பட்டுள்ளது. அக் கடன் தொகை குறித்த விவசாய வங்கிகளுக்கு வழங்கப்படாது அம்பாறை மற்றும் காலி மாவட்ட பொது வைப்புக் கணக்குகளிலிடப்பட்டிருந்தன இடம் பெற்றிருந்தது | அறவிடப்பட்ட வங்கிக் கடன் குறித்த விவசாய வங்கிகளுக்கு வழங்கப்பட வேண்டும். | விவசாய வங்கிகளுக்கு அறிவித்த போதும் இது வரை எதுவித பதிலும் கிடைக்காமையால் பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டுள்ளதாக காலி மாவட்ட அலுவலுகம் அறிவித்துள்ளது. 2015 முதல் 2017 வரையான ரூபா 586,276 தொடர்பாகக் பரீசிலிக்கப்படுகின்றது. துரித நடவடிக்கை எடுக்கப்படும் என அம்பாறை மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது. |

## 2.3 பொறுப்புகளும் கடப்பாடுகளும் ஏற்படுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்டத்திற்குச் சொந்தமான 328 கமநல சேவை நிலையங்களிலிருந்து 17 கமநல அபிவிருத்தி அலுவலகங்கள் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் பெற்றுக் கொண்ட தொகை ரூபா 83,798,770 ஆகும். சிலகமநல சேவை நிலையங்களிலிருந்து ரூபா 1,000,000 போன்ற பெருமளவு தொகை பெறப்பட்டுள்ளதும். அவதானிக்கப்பட்டது. | கமநல சேவை தொழிற்படு மன்றம் அதிகாரச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்ட்ட நிறுவனமாதலால் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெற்ற ரூபா 83,798,770 அந்த கமநல சேவை | இது தொடர்பாக எனது 2020 செப்டம்பர் 10 ஆந் திகதிய 7/5/15-15 இலக்க கடித மூலம் மாவட்ட அலுவலகங்களிடமிருந்து விபரம் கோரப்பட்டுள்ளது. கமநல சேவை தொழிற்படு |

| | | |
|---|---|---|
| அவ்வாறே, 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அத் தொகை தீர்வு செய்யப்படாதிருந்ததுடன், அத் தினத்தில் உள்ளவாறான பொறுப்பிலும் அத் தொகை உள்ளடக்கப்படவில்லை. | நிலையங்களுக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். | மன்றச்செலவைத் தவிர, ஏனைய சகல செலவினங்களுக்கும் ஆணையாளர்களின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனவும், எதிர் காலத்தில் இது தொடர்பாக முறையான சுற்றறிக்கை வெளியிடப்படும் எனவும் எனது 2020 செப்டெம்பர் 03 ஆந் திகதிய 7/5/15.05 இலக்கக் கடித மூலம் சகல மாவட்ட பி.ஆ/உ.ஆ மற்றும் சகல கமநல அபிவிருத்திப் பிரதேச உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2.4 ஏனைய அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கமத்தொழில் அமைச்சின் 118-2-3-37-2506செலவினத் தலைப்பின் கீழ் 2019 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் 80 குழுாய்களும் 100 நீரோடைகளும் பழுதுபார்க்கப்படாது 2018 ஆம் ஆண்டில் ஒப்பந்தக் கொடுப்பனவாக ரூபா 196,857,957 வழங்கப்பட்டிருந்தது. | கமத்தொழில் அமைச்சின் நிதியேற்பாட்டை குறித்த பணிக்கே செலவிட வேண்டும். | புதிய வேலையை நிறைவேற்ற நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டினது விலைப்பட்டியல்களுக்கே இத் தொகை செலுத்தப்பட்டது எனத் தயவுடன் அறிவிக்கின்றோம். |
| (ஆ) 2019 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய ஆயிரம் குளங்கள் ஆயிரம் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 100 குளங்களையும் 100 நீரோடைகளையும் | கமத்தொழில் அமைச்சின் நிதியேற்பாட்டை குறித்த பணிக்கே செலவிட வேண்டும். | புதிய வேலையை நிறைவேற்ற நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டினது விலைப்பட்டியல்களுக்கே இத் தொகை செலுத்தப்பட்டது. எனத் தயவுடன் அறிவிக்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | பழுதுபார்ப்பதற்கு கமத்தொழில் அமைச்சின் 118-2-3-40-2506 செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 700,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அக் குளங்களும் நீரோடைகளும் பழுது பார்க்கப்படாது அந்த நிதியேற்பாட்டில் ரூபா 609,642,901 தொகையானது 2018 ஆம் ஆண்டினது ஒப்பந்தக் கொடுப்பனவுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 10,029,428 மதிப்பீட்டுக் கிரயமுடைய குளங்கள், கால்வாய்கள் பாதைகள், மதகுகள் என்பவற்றைப் புனரமைக்கும் 07 செயற்திட்டங்களுக்கு 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,429,200 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அச் செயற்திட்டங்கள் 2019 டிசம்பர் 31 ஆந் திகதியளவிலும் பூர்த்தியாகாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்ட நிதியேற்பாட்டைக் குறித்த பணிக்கு உபயோகித்து இலக்கிட்ட திகதியில் வேலையைப் பூர்த்தி செய்ய வேண்டும். | நுவரெலியா மாவட்டத்தில் பாறாக் குளத்தை அகழ்விக்கும் செயற்திட்டத்திற்குக் கொடுப்பனவு செய்யக் கூடியவாறு விவசாய அமைப்பு வேலையை நிறைவேற்றிஉள்ளது. 2019 ஆம் ஆண்டின் சீரற்ற காலநிலை காரணமாக விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழான ஏனைய 06 செயற்திட்டங்களும் 2019 ஆம் ஆண்டில் நிறைவடையவில்லை. எனினும், அச் செயற்திட்டத்திற்கான இறுதிக் கொடுப்பனவுகள் தற்சமயம் நடைபெற்றுள்ளன. எனத் தயவுடன் அறிவிக்கின்றோம். |
| (ஈ) | தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பணியகத்திலிருந்து ரூபா 373,500,000 நிதியேற்பாட்டைப் பெற்று வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் 106 சிறு நீர்ப்பாசன புனரமைப்புச் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்தல் 2019 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதும், ஆண்டின்போது அதில் ரூபா | தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பணியகம் வழங்கிய தொகை குறிப்பிட்ட பணிக்கே பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 143,770,451 செலவிடப்பட்டு 53 செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவடைந்திருந்தன. இவற்றிற்குப் புறம்பாக, 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றவிருந்து 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 12 செயற்திட்டங்களுக்கு இந் நிதியேற்பாட்டில் ரூபா 24,281,876 செலவிடப்பட்டிருந்தது. | | |
| (உ) | பதுளை மற்றும் மாத்தளை மாவட்டங்களில் சிறிய குளங்கள், நீரோடைகள் மற்றும் கால்வாய் பாதைகள் என்பவற்றைப் புனரமைக்கும் 08 செயற்திட்டடங்களுக்கு பொது முயற்சிகள், கந்த உடரட்ட மரபுரிமை மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சு வழங்கிய ரூபா 5,300,000 நிதியேற்பாட்டைப் பயன்படுத்திச் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | பொது முயற்சிகள் கந்த உடரட்ட மரபுரிமை மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட நிதியேற்பாட்டை குறித்த பணிக்கே பயன்படுத்த வேண்டும். | விவசாய அமைப்புக்களால் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆண்டு முழுவதும் நிலவிய சீரற்ற கால நிலைமையே காரணம். 2019 ஆம் ஆண்டில் அமுலாக்கப்படாவிருந்த செயற்திட்டங்களை அமுலாக்க முடியவில்லை. |
| (ஊ) | பதுளை மாவட்டத்தில் பொது முயற்சிகள் கந்த உடரட்ட மரபுரிமை மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 2,332,500 மதிப்பீட்டுக் கிரயமுடைய 06 செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதியில் ரூபா 2,253,194 தொகையானது 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்தும் 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அச் செயற்திட்டங்கள் பூர்த்தியாகாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பொது முயற்சிகள், கந்த உடரட்ட மரபுரிமை மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சினது நிதியேற்பாடு செயற்திட்டங்களது இலக்கிடப்பட்ட தினத்தில் உள்ளவாறு பயன்படுத்தப்பட வேண்டும். | வெற்றிடங்களுக்கு நிதியேற்பாடு செய்யப்பட்ட போதும், 2019 ஆம் ஆண்டில் அவை அமுலாகவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | தரிசு வயல் நெற் செய்கைக்கு 001-2-6-11-2503 செலவினத் தலைப்பின் கீழ் சனாதிபதி செயலகத்தால் 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 1,732,500 ஆகும். இதில் ரூபா 362,000 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | சனாதிபதி செயலகத்தினது நிதியேற்பாடு குறித்த பணிக்கே பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஏ) | சனாதிபதி செயலகத்தால் கொழும்பு மாவட்டத்தில் நானவில தரிசு நில நெற் செய்கைக்கான கால்வாய்ப் பாதையை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 932,500 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 362,000 செலவிடப்பட்ட போதும், 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் செயற்திட்டம் முடிவடையவில்லை. | சனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்த நிதியைப் பயன்படுத்தி இலக்கிட்ட திகதியில் செயற்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஐ) | கேகாலை மாவட்டத்தில் 03 நீரோடைகள் மற்றும் குளங்களைப் புனரமைப்புக்கும் செயற்திட்டங்களுக்கு சனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்த நிதி ரூபா 800,000 ஆகும். இவை 2019 ஆம் ஆண்டில் அமுலாகவில்லை. | சனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்த நிதியைப் பயன்படுத்தி இலக்கிட்ட திகதியில் குளங்கள், நீரோடைகள் மற்றும் குளக்கரைகளைப் புனரமைக்க வேண்டும். | மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட சில செயற்திட்டங்களின் பொருட்டு திறைசேரிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2019 க்கமைய நிதி சேமிக்கப்பட வேண்டுமாதலால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி மீளப் பெறப்பட்டிருந்தது. ஆண்டிற்கான நிதி ஏற்பாடு பற்றாக்குறை காரணமாக மேலும் சில செயற்திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. எனத் தயவுடன் அறிவிக்கின்றோம். |

## 2.5 முற்பணத்தை வழங்குதலும் தீர்வு செய்தலும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முற்பணமாக 253 சந்தர்ப்பங்களில் 17 உத்தியோகத்தர்களால் பெறப்பட்ட ரூபா 4,769,898 தீர்வு செய்யப்படுவதற்கு 13 நாட்கள் தொடக்கம் 271 நாட்கள் கழிந்திருந்தன. | இடைக்கால முற்பணம் வேலை முடிவடைந்ததும் தீர்வு செய்யப்பட வேண்டும். | தொடர்ச்சியாக தாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக6/22/2020 ஆந் திகதிய DAD/FIN/PAY/3 இலக்கச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டவற்றை துரிதமாக அமுலாக்குமாறு கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) ஐந்து உத்தியோகத்தர்களால் 10 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 104,134 முற்பணத்தைத் தீர்வு செய்வதற்கு 06 முதல் 207 நாட்கள் வரை கழிந்திருநதன. அதில் 02 உத்தியோகத்தர்கள் பெற்ற ரூபா 48,000 தொகையானது 07 முதல் 14 நாட்களாகப் பயன்படுத்தப்படாத நிலையில் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. | தேவையான விடயத்துக்கு அல்லாது முற்பணம் வழங்கப்படலாகாது. | தொடர்ச்சியாக தாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் 6/22/2020 ஆந் திகதிய DAD/fIN?PAY/3 இலக்கச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டவற்றை துரிதமாக அமுலாக்குமாறு கோரப்பட்டுள்ளது. |

## 2.6 வங்கிக் கணக்குச் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,534,159 பெறுமதியுடைய 192 காசோலைகள் சம்பந்தமாக 396(ஈ) நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கவில்லை. | குறித்த விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,812,287 பெறுமதியான 59 காசோலைகள் தற்சமயம் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அலுவலக காசோலைகளை 396(ஈ) நிதிப் பிரமாணத்தின்படி, |

| | | | |
|---|---|---|---|
| | | | தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) | இனங்காணப்படாத ரூபா 110,775 கொடுப்பனவுகள் 02 மாவட்ட அலுவலகக் கணக்கிணக்கத்தில் உள்ளடங்கியிருந்தன. அவற்றை இனங்கண்டு காசேட்டில் சீராக்கல் செய்யப்படவில்லை. அக் காசோலைகள் 06 மாதங்கள் முதல் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்டனவாகும். | வங்கிக் கணக்கிணக்கத்தில் காணப்படும் இனங்காணாத மீதிகளை இனங்கண்டு காசேட்டில் சீராக்கல் செய்ய வேண்டும். | பொலநறுவை மாவட்ட அலுவலகத்தில் இனங்காணப்படாத ரூபா 47,000 கொடுப்பனவாகக் குறிப்பிடப்படும் தொகை புழுக்களின் தாக்கத்திற்கான இழப்பாக வழங்கப்பட வேண்டிய தொகையை வங்கி இரு தடவைகள் செலுத்தியதால் ஏற்பட்டதாகும். 2020 யூன் மாதமளவில் வங்கி இக் கொடுப்பனவைச் சீர் செய்துள்ளது. போர் நடவடிக்கைகள் காரணமாக கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் 2008 டிசம்பர் 31 ஆந் திகதி கணக்கு நடவடிக்கைகளை முடிவு செய்தது. 2010 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் ஆரம்பமாகியதன் பின்னர் ரூபா 63,775 இனங் காணப்படாத கொடுப்பனவாக வங்கிக் கணக்கிணக்கத்தில் காட்டப்படுகின்றது. நிலவிய போர் சூழல் காரணமாக ஆவணங்கள் சேதமடைந்துள்ளன. ஆகவே, வங்கியிடமோ அல்லது மாவட்ட அலுவலகத்திடமோ இது தொடர்பான விபரங்கள் கிடையாது. ஆகவே, 109 ஆம் நிதிப் பிரமாணத்தின்படி தீர்வு செய்யப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்டுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த நிறைவேற்று மட்டத்தை எய்தாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 06 பணிகளை நிறைவேற்றுகையில் எதிர்பார்த்த நிறைவேற்று மட்டத்தில் 65 சதவீதம் மாத்திரமே பெறப்பட்டிருந்தது. ரூபா 1,965,061,804 எஞ்சியிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கவும் செயற்திட்டத்தில் திட்டமிடப்பட்டவாறும் நடைபெற வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் அமுலாகிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களது உடனுக்குடன் (ONLINE) தரவுகளுக்கமைய, ஒட்டுமொத்த முன்னேற்றம் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 82 சதவீதம் ஆகும். மாவட்டத் தரவுகள் முறையாக நாளதுவரையாக்கபட்டிராமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, அபிவிருத்திச் செயற்திட்டமானது திட்டமிடப்பட்டவாறு குறித்த காலத்துள் பூர்த்தியாகாமையும் அவதானிக்கப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கவும் செயற்திட்டத்தில் திட்டமிடப்பட்டவாறும் நடைபெற வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

### 3.2 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 10,338,000 மதிப்பீட்டுக் கிரயமுடைய 05 செயற் திட்டங்களுக்கு ரூபா 4,474,985 செலவிடப்பட்டிருந்து. செயற்திட்டங்களில் ஒன்று ஒரு மாத தாமதத்தின் பின் பூர்த்தி | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கவும் செயற்திட்டத்தில் திட்டமிடப்பட்டவாறும் நடைபெற | கொழும்பு மாவட்டத்தின் 02 செயற்திட்டங்களும் ஒரே விவசாய அமைப்பால் மேற்கொள்ளப்பட்டதுடன் ஆண்டு முழுவதும் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாகவும், குருநாகலை |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தது. ஏனைய 04 செயற்திட்டங்களும் 2020 மே 30 ஆந் திகதியளவிலும் நிறைவேறாது இருந்தன. | வேண்டும். | மாவட்டத்தின் 02 செயற்திட்டங்களும் மழை காரணமாகவும் பணத்தைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதாலும் புத்தளம் மாவட்டத்தின் செயற்திட்டம் ஆண்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாகவும் வேலை முடிவடையாது இருந்தன |

**3.3 கால தாமதமாகி ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 204,628,381 மதிப்பீட்டுக் கிரயமுடைய 69 செயற்திட்டங்களுக்கு ரூபா 45,965,962 செலவிடப்பட்டிருந்தது. இவற்றுள் 21 செயற்திட்டங்கள் காலதாமதமாக ஆரம்பிக்கப்பட்டு குறித்த கால வரம்பிலும் பார்க்க 01 முதல் 05 மாத கால தாமதத்துடன் நிறைவேறி இருந்தன. அவ்வாறே 2020 மே 30 ஆந் திகதியளவிலும் 48 செயற்திட்டங்களது வேலைகள் நடைபெற்றவாறிருந்தன. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கவும் செயற்திட்டத்தில் திட்டமிடப்பட்டவாறும் நடைபெற வேண்டும் | காலநிலை மாற்றம்,பொருட் கொள்வனவுத் தாமதம், மதிப்பீட்டில் மாற்றம் என்பன பிரதானமாகக் குறித்த காலத்தில் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தடையாகின. அவ்வாறு தாமமாகும் செயற்திட்டங்கள் குறித்த காலத்துள் நிறைவேற்றப்பட முடியாதுள்ளதைச் தயவுடன் அறிவிக்கின்றோம். |

**3.4 வருடாந்த செயற்திறன் அறிக்கை.**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 30 ஆந் திகதிய PED/RED/COPA/2019/01 இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய நிதியாண்டு முடிவடைந்து150 நாட்களுக்குள் திணைக்களத்தால் மீளாய்வாண்டினது செயற்திறன் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமெனினும், 2016, 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளது செயல்திறன் அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. | குறித்த தினத்தில் செயற்திறன் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன் வைக்க வேண்டும். | 2016,2017,2018 ஆம் ஆண்டுகளுக்கான செயற்திறன் அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன் வைப்பதற்கு கமத்தொழில் அமைச்சின் செயலாளரது MOA/AD/EA/05 செயற்திறன் அறிக்கை 2016 இலக்கமுடைய 2020/09/09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த அறிக்கைகளை |

| | | |
|---|---|---|
| | | அச்சிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திறன் அறிக்கை அமைச்சின் அங்கீகாரத்துக்கென 2020 யூலை 21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.5 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் கமத்தொழில் அமைச்சு ஏற்பாடு செய்து பெறப்பட்ட நிதியில் ரூபா 1,579,332 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட பாணந்துறை உணவகத்தைச் சென்றடைவதற்கான படிக்கட்டுக்கள் அமைக்கப்படவிலலை. பின்னர் பாணந்துறை கமநல சேவைகள் நிலையக் குழுவின் நிதியிலிருந்து ரூபா 197,000 செலவிட்டப்பட்டு படிக்கட்டு அமைக்கப்பட்ட போதும், 2020 யூன் 07 ஆந் திகதியளவிலும் உணவகம் திறக்கப்படாதிருந்தது. | உணவகத்தை தாமதமின்றி திறக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஆ) ஐக்கிய நாடு உலக உணவுச் செயற்திட்டத்தினால் சுனாமி நிகழ்ந்தபோது வான் மூலம் ஜீப் வண்டி ஒன்றைத் தருவித்து தீர்வை செலுத்தாது கமநல மற்றும் வனசீவராசிகள் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் இவ் வாகனம் 2015 ஆம் ஆண்டில் அக் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்தது. | குறித்த வாகனத்தைப் பதிவு செய்து பயன்படுத்த வேண்டும். | சுனாமி நிகழ்வின்போது ஐக்கிய நாடுகள் நிறுவனத்தால் இவ்வாகனம் வான் மூலம் தருவிக்கப்பட்டு தீர்வை செலுத்தாது பயன்படுத்தப்பட்டு கமநல மற்றும் வனசீவராசிகள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. பின்னர், பயன்படுத்தப்பட முடியாத நிலையில் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. CR–0098 இலக்க வாகனம் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | இதனைப் பதிவு செய்து பயன்படுத்தாது அந்த ஆண்டு முதலாக மாலபே வாகனப் பிரிவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. | | 7/6/4/6 CR–0098 இலக்கமுடைய 2019 செப்டம்பர் 23 ஆந் திகதிய எனது கடிதத்தின் மூலம் இந்த வாகனத்தின் ரூபா 3,664,055 தீர்வையைச் செலுத்தி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான ஆலோசனை வழங்கப்பட்டது. வர்த்தக,மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களப் பணிப்பாளரிடம்ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் பதில் அளிக்கும்விதத்தில் தீர்வைக் கட்டணம் சம்பந்தமாக குறித்த திணைக்களத்திற்குரிய வரிசை அமைச்சுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது. எனது 2019 டிசெம்பர் 02 ஆந் திகதிய 7/6/4/1/CR-0098 கடிதத்தின் மூலம் இது தொடர்பான ஆலோசனையை கோரி கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | திணைக்களத்திற்குச் சொந்தம் அல்லாத VA-2490 VA – 2489 இலக்கமுடைய 02 மோட்டார் சைக்கிள்களும் 13 வாகனங்களும் மாலபே வாகனப்பிரிவில் இருப்பதுடன் அவற்றைக் குறித்த நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு அல்லது சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகனங்களைக் குறித்த நிறுவனங்களிடம் ஒப்படைக்க அல்லது சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாலபே வாகன பிரிவில் உள்ள வாகனங்களைக் குறித்த நிறுவனங்களிடம் ஒப்படைக்க அல்லது அவற்றைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | திணைக்களத்திற்குச் சொந்தமான மாலபே வாகனப் பிரிவில் 29 பயன்படுத்தப்படாத வாகனங்களும் 03 மோட்டார் சைக்கிள்களும் உள்ளன. அவற்றுள் சில வாகனங்கள் 15 | பழுதபார்து பயன்படுத்த அல்லது கைதவிர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏறக்குறைய 25 ஆண்டுகளாக மாலபே வாகனப் பிரிவில் வாகனங்கள் தரித்து வைக்கப்படுகின்றன. காணி அமைச்சிற்குச் சொந்தமான 02 மோட்டார்ர் வாகனங்களையும் அரசாங்க வழங்கல் திணைக்களத்திற்குச் சொந்தமான |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கும் மேலாக பரவலாக்கப்பட்டு பயன்படுத்தப்படவோ அல்லது கைதவிர்ப்புச் செயயப்படவோ நடவடிக்கை எடுக்கப்படாது துருப்பிடித்தவாறிருந்தன. | | லொறியொன்றையும் தவிர ஏனைய வாகனங்கள் யாவும் மாலபே வாகனப்பிரிவுக்கு கொண்டு வரப்பட்டு ஏறக்குறைய 02-05 ஆண்டுகளாகின்றன. அவை கைதவிர்ப்புக்காகத் தயாரித்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், யப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட சில லொறிகள் சாரதிகள் இல்லாததாலும் பழுதபார்க்கப்படவுள்ளதாகவும். தரித்து வைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அவை பழுதுபார்க்கப்பட்டுப் பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | திணைக்களத்திற்குச் சொந்தமான இயந்திர பிரிவுகளில் உள்ள 35 கமத்தொழில் இயந்திரங்களில் 07 பயன்படுத்தப்படாமல் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இருப்பதுடன் எஞ்சிய 28 இயந்திரங்களும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறுள்ளன. அவை செயலாற்றிய மொத்த இயந்திர மணித்தியாலங்கள் 8,968 ஆகும். | மீட்டர் இல்லாதஇயந்திரங்களது மணித்தியாலக் கணக்குகளுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய விதி முறை பயன்படுதப்பட வேண்டும். பழுது பார்க்கப்பட வேண்டிய இயந்திரங்களைப் பழுதுபார்த்துப் பயன்படுத்தவும் ஆற்றலை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இயந்திரப் பிரிவில் உள்ள 02 இயந்திரங்களது மணித்தியாலங்களைக் கணிப்பிடுவதற்கு மீட்டர் கிடையாது அவ்வாறே, பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ள இயந்திரங்களைப் போன்றே சீரற்ற வருடாந்தக் காலநிலைமையும் செயற்திட்டங்களுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் வசதி இன்மை காரணமாகவும் இயந்திரங்களுக்கான செயற்திட்டங்களுக்குக் கோருவதும் குறைந்துள்ளதால் பயன்பாடு குறைந்துள்ளது. |
| (ஊ) | 1997 முதல் 2018 வரை 17 உரக் களஞ்சியங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | உரக் களஞ்சியங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். | பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலைமையில் உரக் களஞ்சியங்கள் இருப்பதாலும் விவசாயிகளுக்கு உரத்துக்ககுப் பதிலாக பணம் வழங்குவதும் உரக் களஞ்சியப் பாவனை குறைவடையக் காரணமாக உள்ளது. |
| (எ) | செயலாற்றலும் பாவனையற்ற நிலையிலும் 06 முதல் 24 ஆண்டுகளாக 21 கமநல சேவை நிலையங்களில் 96 டிறக்டர்கள், 21 டிறெய்லர்கள் 83 அலுவலக | சொத்துக்கள் துருப்பிடிப்பதற்கு முன்னர் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | டிறக்டர் மற்றும் கமத்தொழில் துணைப் பாகங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு தற்சமயம் மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. கைதவிர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இந்த |

| | | |
|---|---|---|
| இயந்திரங்கள்,24 தராசுகள், 03 நாற்று நடுகை இயந்திரங்கள், 07 தானியங்களை உலர வைக்கும் இயந்திரங்கள், 29 நீர்ப் பம்புகள், 16 நீர்விசிறும் 53 இயந்திரங்கள்,03 புல் வெட்டும் இயந்திரங்கள், 06 ரொடரேட்டர் இயந்திரங்கள் என்பன இருப்பது அவதானிக்கப்பட்டது. | | ஆண்டளவில் அகற்றுவதற்கு எண்ணப்பட்டுள்ள உபகரணங்களைத் துரிதமாகக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.6 அரச உத்தியோகத்தர்களது பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இற்கமைய பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் பிணை வைப்புச் செய்யவேண்டுமாயினும் 9540 திணைக்கள உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்யவில்லை. | நிதிப் பிரமாணத்தின்படி பிணை வைப்பு பெற வேண்டும். | அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு சம்பந்தமாக எனது7/5/15-05 ஆம் இலக்க 2020 யூன் 25 ஆந் திகதிய 8/2020 சுற்றறிக்கை மூலம் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனது 7/5/15-05 ஆம் இலக்க 2020 யூன் 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்த தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.7 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்திதுயோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 கணக்கீட்டு ஆண்டிற்கென திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 25 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2020 ஆகஸ்ட் 18 வரை பதில் வழங்கப்படவில்லை. | குறித்த காலத்தில் கணக்காய்வு ஐயவினாக்களுக்குபதில் வழங்கப்பட வேண்டும். | 2020 செப்தெம்பர் 15 இல் உள்ளவாறு 25 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கப்படவுள்ளது. |

## 3.8 முகாமைத்துவ நலிவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்திதுயோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப விசாரணைகள் 62 தொடர்பாக அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன. எனினும் 06 மாதங்கள் முதல் 09 ஆண்டுகளாகியும் அறிக்கைகள் பெறப்படவில்லை. மேலும் 97 முறையான ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொண்டு அறிக்கைகள் பெறுதல் மற்றும் ஒழுக்காற்று கட்டளைகள் அமுலாக்குதல் சம்பந்தமாக 02 முதல் 08 ஆண்டுகள் கழிந்திருந்தன. | அசாதாரண தாமதம் அவதானிக்கப்படுவதில் தாமதமின்றி சகல விசாரணைகளையும் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிட வேண்டும். | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப விசாரணைகளில் 07 கோவைகளது ஆரம்ப விசாரணை அறிக்கைகள் தற்சமயம் பெறப்பட்டுள்ளன. அதற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்குப் புறம்பாக ஆரம்ப விசாரணைகளுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சில கடமைகளின் நிமித்தம் அறிக்கையை வழங்குவதில் கால நீடிப்பு பெறுவதால் இவ்வாறாக அறிக்கை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த அறிக்கைகளைத் துரிதமாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தயவுடன் அறிவிக்கின்றோம். இதுவரை பரிசீலனை செய்யப்பட்டுள்ள முறையான ஒழுக்காற்று விசாரணைகளின் 17 அறிக்கைகள் தற்சமயம் பெறப்பட்டுள்ளன. 11 கோவைகள் தொடர்பான ஒழுக்காற்று கட்டளைகள்நாளது வரை வழங்கப்பட்டுள்ளன. இக்கோவைகள் தொடர்பாக வழங்கப்படும் ஒழுக்காற்று கட்டளைகள் தற்சமயம் அமுலாக்கப்பட்டவாறுள்ளன. 03 கோவைகள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்துள்ளனர்.என்பதைத் தயவுடன் அறிவிக்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் இழப்புகள் மற்றும் நட்டங்களுக்கான பதிவேட்டில் 14 ஆண்டுகளாக நிலவி வரும் இழப்பு மீதிகள் இருந்தன. | இழப்புகள் மற்றும் நட்டங்கள் தொடர்பான அசாதாரண தாமதத்தைத் தவிர்க்கவும் ஏற்பட்ட இழப்பை உடனடியாக அறவீடு செய்யவும் வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (இ) | களுத்துறை மாவட்டத்திலுள்ள பதுரலிய கமநல சேவைகள் நிலையத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுகடமையாற்றியிருந்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்தென் மாகாண தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி நிலையத்திற்கு விடுவிக்கப்பட்ட காலப்பகுதி தொடர்பாக ஆரம்ப தவணைப்பணம்ரூபா 100,000 மற்றும் 06 சமமான தவணைப்பணங்கள் மூலம் செலுத்தப்பட்ட ரூபா 321,728 சம்பளத்தை அறவீடு செய்வதற்கு 2019 பெப்ரவரி 21 இல் கமநல சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 126,773 தொகை 2020 ஆகஸ்ட் 18 வரையிலும் குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனத்திடமிருந்து இயன்றளவு விரைவாக விடுவிக்கப்பட்ட காலப்பகுதிக்குரிய சம்பளங்கள் மற்றும் படிகள் மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு 2019 செப்தெம்பர் 27 இல் இருந்து அவரால் காசாக ரூபா 158,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 மே மற்றும் யூலை மாத அவரது சம்பளங்களிலிருந்து ரூபா 36,954 தொகை அறவிடப்பட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் 18 இல் உள்ளவாறு ரூபா 126,773 மீதி ஒன்று காணப்பட்ட போதிலும் 2020 ஆகஸ்ட் மாத சம்பளத்திலிருந்து ரூபா 18,122 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது மிகுதியாகவுள்ள தொகை ரூபா 108,600 ஆகும். |
| (ஈ) | 2014 தொடக்கம் 2018 வரை 104 ஆம் நிதிப்பிரமாணத்தின் படி மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைக்கமைய 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,809,976 அறவிடப்படுவதற்கு 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | அசாதாரண தாமதம் ஆகையால் தாமதமின்றி இத் தொகையை அறவிட வேண்டும். | எட்டுக் கோவைகள் பரிசீலிக்கப்பட்டுள்ளவாறு உள்ளன. |
| (உ) | 2016 ஆம் ஆண்டில் பொலநறுவை மாவட்டச் செயலகத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 148,282 செயற்திட்டங்களை இனங்காணாமையால் ஏறக்குறைய 04 ஆண்டுகளாக | தொடர் நடவடிக்கை மூலம் வைப்புக்கள் துரிதமாகத் தீர்வு செய்யப்பட வேண்டும். | இதில் குறிப்பிடப்பட்ட ரூபா 148,282 பொலநறுவை மாவட்டச் செயலாளருக்கு 2020 யூன் 29 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பொலநறுவை மாவட்ட அலுவலகங்களையும் கணக்குகளில் இடப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | 2017 டிசெம்பர் 04 ஆந் திகதியன்று அனுராதபுரம் மாவட்ட அலுவலகத்தில் சப்புமல்கஸ்கடவெவ மற்றும் குடாதிக்வெல ஆகியவற்றை புனரமைக்க கமநல நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 4,156,615 குறித்த பணிக்குப் பயன்படுத்தப்படாது ஏறக்குறைய 02 ஆண்டுகளாக கமநல பொது வைப்புக் கணக்குகளில் இடப்பட்டிருந்தன. | தொடர் நடவடிக்கை மூலம் வைப்புக்கள் துரிதமாகத் தீர்வு செய்யப்பட வேண்டும். | புனரமைப்பு வேலைகள் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் வவுனியா மாவட்ட எல்லையை நிர்ணயிக்கும் போது மேற்படி நீர்ப்பாசன வேலை மடுகந்த கமநல சேவை பிரிவிலிருந்து கெபதிகொல்லாவ கமநல சேவைகள் பிரிவுக்கு மாற்றலாகி இருந்தது. இதன் காரணமாக பங்குப் பணத்தைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டு புனரமைப்பு தாமதமாகியதால் 2018 ஏப்ரல் 15 வரை கால நீடிப்பு ஏற்பட்டது. எனினும் அப் புனரமைப்பு வேலையைப் பூர்த்தி செய்வதற்கு விவசாய அமைப்பு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கமைய,குடாதிக்வெவ புனரமைப்பு வளங்கள் முடிவடைதல் கொடுப்பனவு செய்ய முடியாதரூபா 4,156,615 நிதியத்திற்கு திருப்பியளிக்கப்பட்டது. |
| (எ) | கைவிரல் அடையால இயந்திரங்களைப் பயன்படுத்தாத 97 கமநல சேவை நிலையங்கள் அவதானிக்கப்பட்டன.<br>அவ்வாறே, சில கமநல சேவை நிலையங்களில் கைவிரல் அடையாள இயந்திரங்கள் இருந்த போதும், தொழில்நுட்பப் பிரச்சினைகள் காரணமாக அறிக்கைகளைப் பெற முடியாதுள்ளது. | கைவிரல் அடையாள இயந்திரங்களை வருகையைக் குறிப்பதற்கும் செல்வதைக் குறிப்பதற்கும் பயன்படுத்த வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஏ) | இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தில் நிலைத்து நிறகவல்ல கமத்தொழில் நீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் மூலம் (2005 – 2018) ரூபா 400,000 | கடனை அறவிட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான சூரிய சக்தி நீர் சூட்சும முறைமை கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் 09 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. அக் கடன் குறித்த காலத்தின் அறவிடப்படாதால் 2019 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் 09 விவசாயிகளிடம் இருந்து ரூபா 3,273,478அறவிடபட வேண்டியிருந்தது. அவ்வாறே 2020 யூலை 10 அளவில் முறைமைகளில் 06 செயற்படாத நிலையில் இருந்தன. | | |
| (ஐ) | கமத்தொழில் காணி மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2020 யூலை 18 ஆந் திகதியளவிலும் 21 மாவட்டங்களில் விவசாயக் காணிப் பதிவேடு சான்றுபடுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | விவசாயக் காணிப் பதிவேட்டைச் சான்றுறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும் | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஒ) | விவசாய வங்கிகளால் 14 மாவட்ட அலுவலகங்களில் 13 வகைக் கடனாக 17,895 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு காலங் கடந்த ரூபா 297,372,717 மீதியைக் காட்டியது இது அறவிடப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | கடனை அறவிட வேண்டும் | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஓ) | திணைக்களத்தால் 259 ஏக்கர் காணியில் 04 மாவட்ட அலுவலகங்ளும் 237 கமநல சேவை நிலையங்களும் பேணப்படுகின்றன. இதனைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | இக் காணியைத் திணைக்களம் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஔ) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 406 கமநல சேவை நிலையங்களில் தாபிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நெடுங்காலமாக அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா | கடன்பட்டோர் மீதியை தாமதமின்றி அறவிட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

532,689,579 ஆகும். இவற்றின் எண்ணிக்கை 4,355 ஆகும். குறித்த கடன் மீதியை அறவிடுவதற்கு மாவட்ட அலுவலகங்களும் திணைக்களங்களும் நடவடிக்கை எடுக்கவில்லை.

## 4. நல்லாளுகை

### 4.1 பொது மக்களுக்கான சேவை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்திதுயோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017,2018, 2019 ஆம் ஆண்டுகளில் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்ற பொது மக்களது புகார் மற்றும் கோரிக்கைகளில் முறையே 422,478,326 என்பனவற்றிற்கு தீர்வு கிடைக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | புகார்களைத் தாமதமின்றி மேற்பார்வை செய்வதற்கு விதி முறைகள் இனங் காணப்பட வேண்டும். | பொது மக்களது புகார்கள் மற்றும் கோரிக்கைகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பான பிரதி உதவி ஆணையாளர்களாலும் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்களாலும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும். ஆணையாளர் பெறும் கோரிக்கைகளும் புகார்களும் ஒவ்வொரு மாவட்டத்திற்குப் அனுப்பப்படுவது அம் மாவட்டத்திலேயே மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி / உதவி ஆணையாளர்களது வேண்டுகோளின் படி தேவையான அங்கீகாரம், ஆலோசனை என்பவற்றை நாம் வழங்குவோம். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட திணைக்களத்தின் சாதாரண நிர்வாகத்தை நடாத்துவதற்கு தேவையான ஆளுக்குரிய வேதனம் மற்றும் பராமரிப்புச் செலவினத்தை மேற்கொள்ளுதல், மூலதன சொத்துப் பெறுவனவு, பொருட்களது புனரமைப்புக்கான செலவினம், கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தை அமுலாக்குவதற்கான மூலதனச் சொத்துக்கள் சுவீகரிப்பு மற்றும் புனரமைப்புக்கான செலவினம், கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தை அமுலாக்குவதற்கான மூலதனச் சொத்துச் சுவீகரிப்பு மற்றும் புனரமைப்புச் செலவினத் பழுதுபார்த்தல்கள், குளங்களைப் புனரமைத்தல் புனர் நிர்மாணித்தல் மற்றும் சிறு நீர்ப்பாசன புனரமைப்பு, கமநல அபிவிருத்தி நிதியப் பெறுவனவு கொடுப்பனவும் பரீசீலிக்கப்படுதல், நிலையங்களது இறுதிக் கணக்குகள் போன்ற நோக்கங்களை மீளாய்வாண்டின் போது நிறைவேற்ற முடியவில்லை என அவதானிக்கப்பட்டது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு மீளாய்வாண்டில் 19 மாவட்ட அலுவலகங்களில் சம்பளமும் படியுமாக ரூபா 13,180,787 வழங்கப்பட்டிருந்தது. | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள் என்பன கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்ட பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 2,192, மணித்தியாலங்கள் ஆகும். எவ்வாறாயினும், அது கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்வதற்கு முன்னரான நேரமாகும். 2019 ஆம் ஆண்டினது கணக்காய்வுத் திட்டத்தில் நேரமானது 1,128 மணித்தியாலங்களாக 2019 ஒக்டோபர் 19 அன்று மீளாய்வு செய்யப்பட்டது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியணி உள்ளவாறான பதவியணி, ஆறுக்குரிய மூலதனச் செலவினம்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்திதுயோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் திணைக்களத்தின் மொத்த வெற்றிட எண்ணிக்கை 3,534 ஆகவிருந்தது. 10 பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஒரே ஊழியரேனும் நியமிக்கப்படவில்லை. | ஆணையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவளம்) ஆணையாளர் (சேவை) மற்றும் 2020 ஒக்டோபரில் ஓய்வு பெறாவிருந்த ஆணையாளர் (அபிவிருத்தி) பதவிகள் அடங்கலாக சகல அத்தியாவசிய பதவிகளும் நிரப்பபட வேண்டும். | திணைக்களத்தின் அநேக பதவி வெற்றிடங்களுக்கு 2018, 2019 ஆம் ஆண்டுகளில் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. சில வெற்றிடங்களில் இவற்றை 2020 ஆம் ஆண்டிலும் ஏனையவற்றை 2021 ஆம் ஆண்டிலும் நிரப்புவதற்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அங்கீகாரம் வழங்கி உள்ளது. தற்சமயம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களது வெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்கும் பரீட்சை தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. மேலும், தொழில்நுட்ப உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் தற்சமயம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) | திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய ஆணையாளர் பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையின் 1 ஆந் தர உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும். எனினும், இலங்கை நிர்வாக சேவையின் III ஆந் தர உத்தியோகத்தர் ஆணையாளர் சேவை, நிர்வாக மற்றும் மனிதவள பதவிகளில் பதில் கடமையாற்றியவாறிருந்தனர். | அத்தியாவசிய வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | கமநல சேசைவைத் திணைக்களத் தலைமை அலுவலகத்தின் இலங்கை நிர்வாக சேவை 1 ஆந் தரத்திற்கும் ஆணையாளர் (சேவை) ஆணையாளர் (நிர்வாகமும் மனிதவளமும்) ஆகிய பதவிகளும் இலங்கை நிர்வாக சேவையின் 1 ஆந் தர உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது கடித மூலம் பொது நிர்வாக அமைசிடம் ஏற்கனவே தொடர்ச்சியாக விண்ணப்பித்திருந்தும் இது |

| | | | |
|---|---|---|---|
| | | | வரை அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் இவ் வகை நிர்வாக சேவையின் 111 ஆந் தரத்தில் உள்ள 2 உத்தியோகத்தர்கள் பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். |
| (இ) | தீவு முழுவதுமானவிவசாய வங்கிகளது எண்ணிக்கை 555 ஆகும். விவசாயி வங்கி உத்தியோகத்தர் மற்றும் உதவி விவசாய வங்கி உத்தியோகத்தர்கள் அடங்கலாக சகல பதவிகளிலும் வெற்றிடங்கள் உள்ளன. விவசாய வங்கி நடவடிக்கைகளுக்கு கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பயன்படுத்தபடுகின்றனர் அதன் காரணமாக கமநல சேவை நிலையங்களில் அநேக பிரிவுகளுக்கு ஒரேயொரு கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் நியமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அத்தியாவசிய பதவிகளை முறையாக பரிசீலித்து, வெற்றிடங்களை நிரப்பி, கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளரை நியமிக்க வேண்டும். | கமநல சேவைகள் திணைக்கள விவசாய வங்கி உத்தியோகத்தர் மற்றும் உதவி விவசாயி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களுக்குரிய ஆட் சேர்ப்பு நடைமுறை அமைச்சரவைக்கு அனுபப்பட்டுள்ளது. அதனை மீளாய்வு செய்யுமாறு நாம் கோரப்பட்டுள்ளோம். தற்சமயம், மீளாய்வு நடைபெறுகின்றது. எனினும், கமநல சேவை நிலையங்களுக்குரிய பிரதேசத்தில் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியுள்ளோம். |
| (ஈ) | திணைக்களத்தின் மாவட்டங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களது பெயர் வழிக்கோவைகள் நாளது வரையாக்கப்படாமையால் சேவையில் நிரந்தரமாக்கப்படுதல் சம்பளம் வருடாந்த பதவி உயர்வு ஆகியன தாமதமாகி உள்ளன. இதன் காரணமாக பதவி உயர்வின் போதும் ஓய்வு பெறும் போதும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பிரச்சினைகளை எதிர் நோக்குவது அவதானிக்கப்பட்டது. | பெயர் வழிக் கோவைகள் நாளது வரையாக்கப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |